# நீ மெய்யான சீஷனா?

## (Are you a true Disciple?)



டாக்டர். டேவிட் இளங்கோவன்

**சீர்திருத்த பாப்டிஸ்ட் திருச்சபை**

**REFORMED BAPTIST CHURCH**

*295*, சாந்தி நகர், ஏற்காடு மெயின்ரோடு,

சேலம்-*636008*.

**கைபேசி எண்:** +91 98427 67184

**இணையதளம்:**

**www.tamilchristianmessages.com**

**www.reformedbaptistchurch.in**

உங்களுக்கு ஆவிக்குரிய குழப்பங்கள், கேள்விகள் இருப்பின் மேற்கண்ட கைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு, பகிர்ந்துகொள்ளலாம். அல்லது மேற்கண்ட முகவரிக்கு கடிதம் மூலம் பகிர்ந்துகொள்ளலாம்.

**"நீ மெய்யான சீஷனா?"- இந்த செய்தியை நீங்கள் இணையதள வழியாகவும் கேட்கலாம்.**

*http://reformedbaptistchurch.in/tamil-christian-messages/message/1-discipleship-1/watch*

*http://tamilchristianmessages.com/discipleship/*

*https://youtu.be/_EclKJGg5Uc*

**சீர்திருத்த சத்தியங்கள்**

# சீர்திருத்த பாப்டிஸ்ட் வெளியீடு

# நீ மெய்யான சீஷனா?

## சீஷத்துவம் என்பது தேவனுடைய கட்டளை:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களை அனுப்பும் பொழுது, "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து" (மத்தேயு 28:19) என்று கட்டளையிட்டதை வேதத்தில் வாசிக்கிறோம். இங்கு தேவன் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவர்களை சீஷராக்குங்கள் என்று சொல்லுகிறார். ஆகவே ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லுவதற்கும், சீஷன் என்று சொல்லுவதற்கும் வித்தியாசமில்லை. ஒரு சீஷன் தான் கிறிஸ்தவன், ஒரு கிறிஸ்தவன் தான் சீஷன். மேலும் அவர்களை எப்படி சீஷராக உருவாக்க வேண்டும் என்றும் வேதத்தில் சொல்லியிருப்பதைக் காணலாம். வேதத்தில் அநேகர் ஆண்டவரிடத்தில் வந்து உம்மை நான் பின்பற்றி வருகிறேன் என்ற சொன்னபொழுது, அவர்களை சரி வாருங்கள் என்று ஆண்டவர் சொல்லவில்லை. மாறாக, அவர் சொன்ன பதில் அவர்களை அதைரியப்படுத்தக்கூடிய விதத்தில் காணப்பட்டது. இதைப் பார்க்கும்பொழுது விந்தையான காரியமாகக் காணப்படுகின்றது. பொதுவாக இன்றைய சபைகளில் மறக்கப்பட்டு போன சத்தியம் சீஷத்துவம். அநேக சபைகள் இன்றைக்கு ஆட்களை சேர்க்க வேண்டும் என்று வெகு தீவிரமாய் செயல்படுகின்ற காரியமுண்டு. ஆனால் சீஷத்துவத்துக்குள் வழிநடத்தக் கூடிய சபைகள் அற்பசொற்பமே. அவ்விதமான சபைகளுக்கு ஜனங்கள் அதிகம் போவதில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் உம்மைப் பின்பற்றி உம் சீஷர்களாக வருகிறோம் என்று சொன்னவர்களிடத்தில், அவர் அதைரியப்படுத்தக்கூடிய விதத்தில் பதிலுரைத்தார். அவரிடத்தில் வந்தவர்களை அவர் தைரியப்படுத்தி, உற்சாகப்படுத்தி சீஷராக்கி இருந்தால் நலமாயிருக்குமே என்று நாம் நினைக்கலாம். ஆனால் தேவனுடைய பார்வையில் சீஷத்துவம் என்பது வித்தியாசமானது. சீஷத்துவம் என்பது நாம் நினைப்பதைவிட முற்றிலும் வேறுபட்டது. அந்த சீஷத்துவம் என்ன என்பதைப் பற்றி இந்த சிற்றேட்டில் பார்க்கலாம்.

## ஆதித் திருச்சபையில் சீஷர்களின் எண்ணிக்கை:

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மரித்து, பரலோகத்திற்கு சென்ற பின்பாக அப்போஸ்தல நடபடிகள் முதலாம் அதிகாரத்தில் அங்கிருந்த சீஷர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை நாம் வாசிக்கிறோம். "அந்நாட்களிலே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது" (அப் 1:15). ஒரு காலத்தில் திரளான மக்கள் இயேசுகிறிஸ்துவினிடத்தில் கூடிவந்திருந்தார்கள். நாலாயிரம் பேர், ஐயாயிரம் பேர் என்று அவர் பின் சென்றார்கள். ஆனால் அவர் சென்ற பின்பாக வந்திருந்த சீஷர்களின் எண்ணிக்கை 120 பேர் மாத்திரமே. எவ்வளவு வித்தியாசமான எண்ணிக்கையில் சீஷகள் காணப்படுகிறார்கள் என்று நாம் பார்க்கிறோம். அருமையானவர்களே! இவ்விதமாக ஏற்படக் காரணமென்ன? இயேசு கிறிஸ்து இருந்த பொழுது திரள் கூட்டமான மக்கள் அவர் பின்பாக சென்று அவர்கள் மூன்று நாளாக சாப்பிடாமல் சத்தியத்தை கேட்டார்கள். அவர்களுக்காக இயேசுகிறிஸ்து பரிதபித்ததை வேதத்தில் வாசிக்கிறோம். ஒருமுறை ஐயாயிரம் பேரை போஷித்தார். இன்னொருமுறை நாலாயிரம் பேரை போஷித்தார். அவர்கள் எல்லாம் இப்பொழுது எங்கே போனார்கள்? அவர்களின் நிலை என்ன?

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சீஷத்துவத்திற்கு சில நிபந்தனைகளை விதித்ததைப் பார்க்கிறோம். தன்னிடத்தில் கூடியிருந்த மக்களைப் பார்த்து இவ்விதமாகக் கூறுகிறார். "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" (மத்தேயு 7:13-14). இங்கு இயேசுகிறிஸ்துவின் உபதேசம் வித்தியாசமாக காணப்படுகிறதல்லவா! மேலும் அவர் உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று சொல்லியிருக்கிறார். பவுலும் கூட நல்ல போராட்டத்தைப் போராடினேன் என்று சொல்லுகிறார். இங்கு தேவன் இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசியுங்கள் என்கிறார். இடுக்கமான வாசல் (Narrow gate) என்ற வார்த்தையின் கிரேக்கப்பதம் எதைக் குறிக்கிறது என்று பார்த்தால், திராட்சைப்பழத்தை நசுக்குவதை

*(Press the grapes)* குறிப்பிடுகிறது. அதாவது நாம் திராட்சை ரசம் எடுக்க எவ்வளவாக திராட்சப்பழத்தை நசுக்க வேண்டுமோ, அதே பதத்தைத் தான் இங்கு குறிப்பிட்டு இயேசுகிறிஸ்து போதிக்கிறார். உள்ளே நுழைவதற்கு மிகவும் கடினப்படவேண்டும். இயேசுகிறிஸ்து ஏன் இவ்விதமாக போதிக்க வேண்டும்?

## மூன்று நபர்களின் செயல்கள்:

வேதத்தில் மூன்று நபர்கள் இயேசுவினிடத்தில் வந்தார்கள். அவர்களை நாம் லூக்கா எழுதின சுவிஷேசம் ஒன்பதாம் அதிகாரத்தில் பார்க்கலாம். இந்த மூவருமே உம்மைப் (இயேசுவைப்) பின்பற்றுகிறோம் என்று வந்தவர்கள்.

### முதலாம் நபர்:

“அவர்கள் வழியிலே போகையில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான்” (லூக்கா **9:57**). இயேசுவே நீர் எங்கே போனாலும் சரி நான் உம்மோடு கூட வருவேன், உம்முடைய வழிலே நடப்பேன், உமக்காக வாழுவேன் என்று சொன்னான். இங்கு ஒருவேளை நாமாக இருந்தால் அவனைப்பார்த்து என்ன சொல்லியிருப்போம்? எவ்வளவு ஒரு அருமையான ஆத்துமா இது. சகோதரனே நீங்கள் வாருங்கள். நீங்கள் மிகவும் அருமையான முடிவை எடுத்திருக்கிறீர்கள் என்று கூறியிருப்போம். ஆனால் இயேசுகிறிஸ்துவின் பதில் என்னவென்று வேதத்தில் பாருங்கள். “அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்” (லூக்கா **9:58**). இங்கு தேவன், நீ என்னைப் பின்பற்றி வருகிறேன் என்று சொல்லுகிறாய் சரி. ஆனால் நரிகளுக்கு குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடுகளும் இருக்கிறது. மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்கவே இடமில்லையே என்று சொன்னார். இப்போது நீ என்னைப் பின்பற்றி வர ஆயத்தமாக உள்ளாயா? என்று கேட்டார். இந்த மனிதன் அவரைப் பின்பற்றி இருப்பானோ, இல்லையோ என்பதைப் பற்றி நமக்கு தெரியவில்லை. அதைப்பற்றி வேதத்தில் நாம் பார்க்க முடியவில்லை. ஆனால் அன்பான சகோதரனே! சகோதரியே! நீ இயேசுவைப் பின்பற்ற வேண்டுமானால் இவ்விதமான காரியங்களுக்கும் நீ ஆயத்தமாக இருக்கவேண்டும். சீஷத்துவம் என்பது இதுதான். சீஷத்துவம் என்பது ஆண்டவரே நீர்

இதைச் செய்தால் உம்மைப் பின்பற்றுவேன், அதைக் கொடுத்தால் உம்மைப் பின்பற்றுவேன் என்று சொல்லுவது சீஷத்துவமல்ல. அப்படி சொல்லுகிறவன் கிறிஸ்தவனுமல்ல. இன்றைக்கு அநேக போதனைகள் அவ்விதமாக மலிந்து கிடக்கிறது. இயேசுவை நீங்கள் பின்பற்றுவீர்களானால் அதிகமதிகமாய் உங்களை ஆசீர்வதிப்பார் என்று இன்றைக்கு சபைகளில் போதிக்கப்படுகிறது. ஆனால் இங்கு இயேசுகிறிஸ்து அவ்விதம் இந்த மனிதனை உற்சாகப்படுத்தினாரா? அல்லது சோர்வுறப் பண்ணினாரா? அன்பானவர்களே! நீங்களும் நானும் தேவனுடைய அளவுகளை மாற்ற முடியாது. அவருடைய போதனைகள் அதுதான். அவர் சர்வ ஏகாதிபத்தியம் நிறைந்த தேவன். நீ இயேசுவைப் பின்பற்ற வேண்டுமானால் எல்லாவற்றிற்கும் ஆயத்தமாக இருக்கவேண்டும். கிறிஸ்துவையே முழுமையாக பற்றிக்கொண்டு வாழவேண்டும். அதுதான் வேதம் போதிக்கும் சீஷத்துவம். முதலாவது தேவனை வைக்க நீ ஆயத்தமாக இருக்கிறாயா?

**இரண்டாம் நபர்:**

“வேறொருவனை அவர் நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்” (லூக்கா 9:59). யூதர்கள் பொதுவாக சடலத்தை நீண்ட நேரம் வைத்திருக்க விரும்பமாட்டார்கள். ஒருவன் மரித்த உடனே அந்த சடலத்தை அடக்கம் பண்ணிவிடுவார்கள். தேவன் இந்த இரண்டாம் நபரை அழைத்தபோது, அந்த மனிதன் நான் உம்மைப் பின்பற்றுகிறேன் ஆண்டவரே ஆனால் முதலில் தன் தகப்பனை அடக்கம் பண்ண உத்தரவு வேண்டும் என்றான். அதற்கு தேவன் சரி என்று சொன்னாரா? தேவனுடைய பதில் மிகவும் வித்தியாசமாக இருந்தது. “அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார்” (லூக்கா 9:60). ஆவியில் செத்துப்போனவர்களை ஆவியில் மரித்தவர்கள் அடக்கம் பண்ணுவார்கள் நீ போய் தேவனுடைய வார்த்தையை பிரசங்கம் பண்ணு என்று கூறுகிறார். நீங்கள் நினைக்கலாம், இதெல்லாம் கடினமான போதனையாக இருக்கிறதே என்று. ஆனால் தேவன் வரையறுத்திருக்கும் அளவுகள் இதுதான். இதுதான் சீஷத்துவம். இயேசுகிறிஸ்துவை பின்பற்றுகிறது என்பது

இதுதான். நீங்கள் எப்படி கிறிஸ்துவை பின்பற்றுகிறீர்கள்? நீங்கள் முதலாவது இயேசுகிறிஸ்துவை முன்வைக்கிறீர்களா? அல்லது உங்களுடைய உறவுகளுக்கும், மற்ற காரியங்களுக்கும் முதலிடம் கொடுக்கின்றீர்களா? உங்கள் வாழ்க்கையில் யாருடைய காரியம் முதலாவது, முக்கியமானது? தேவனுடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, முதலில் அதைச் செய்ய விரும்புகிறேனா? ஆராய்ந்து பாருங்கள். இதுதான் இயேசுகிறிஸ்துவின் அளவுகள். இதைத்தான் சீஷர்களுக்குப் போதித்தார். அதன்படி செய்யவும் சொன்னார். அப்போஸ்தலர்களிடம் நீங்கள் போய் சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுங்கள் என்று இதைத்தான் கட்டளையிட்டார். அன்பானவர்களே! இன்றைய கால போதனைகளுக்கும், இயேசுகிறிஸ்துவின் போதனைகளுக்கும் எவ்வளவு வித்தியாசமாக காணப்படுகிறது அல்லவா? இன்றைக்கு தொலைகாட்சி மற்றும் வானொலி போதகர்கள், இயேசு ஆசீர்வதிக்கிறார், இயேசு என்னை இவ்வளவாய் ஆசீர்வதித்தார் என்று வேதத்திற்கு புறம்பான காரியங்களைச் சொல்லி ஜனங்களை வழிதப்பப் பண்ணுகிறார்கள். இது மிகவும் ஆக்கினைக்குட்பட்ட செயல் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

**மூன்றாவது நபர்:**

"பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்" (லூக்கா **9:61**). இந்த மூன்றாவது நபர், ஆண்டவரே உம்மைதான் நான் பின்பற்ற போகிறேன், நான் உம்முடைய சீஷன்தான், உம்மையே நேசித்து உம்மையே பின்பற்றுகிறேன், நீரே எனக்கு முக்கியம் என்று சொன்னான். ஆனால், "முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்" என்று உத்தரவு கேட்டான். அதாவது வீட்டிற்கு சென்று என்னுடைய குடும்பத்தினரைப் பார்த்து நான் இவ்விதமாய் ஊழியத்திற்கு செல்லுகிறேன் என்று சொல்லி நான் எப்படியாகிலும் வந்து விடுகிறேன் ஆண்டவரே என்று உத்தரவு கேட்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்து: "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" (லூக்கா **9:62**) என்று சொன்னார். ஒரு உழவன் கலப்பையின்

மேல் கையை வைத்துவிட்டு அங்கும் இங்கும் பார்த்துகொண்டு வேலை செய்வானா? இல்லை. கலப்பையின் மேலே கை வைத்ததும் அது நேராகப் போகிறதா என்று கலப்பையைப் பார்த்து உழுவான். அது நன்கு ஆழமாகப் போகிறதா என்று பார்த்துதான் செய்வான். ஆகவேதான் தேவன் சொல்லுகிறார், நீ கலைப்பையின் மேல் கையை வைத்துவிட்டு திரும்பிப் பார்த்தால் தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு தகுதியுடையவன் அல்ல. அதாவது நீ ஆண்டவருடைய காரியங்களுக்கு எந்த விதத்திலும் நீ தகுதியுடையவன் அல்ல. அன்பானவர்களே! ஏன் ஆண்டவர் இவ்விதமான காரியத்தை போதிக்க வேண்டும்? ஆம்! இதுதான் மெய்யான சீஷத்துவம் என்பது. ஒரு மனிதன் இயேசுவைப் பின்பற்றினால் அவரே முதலாவதும், அவரே முடிவாகவும் இருக்க வேண்டும். அவரைத்தான் நீ பின்பற்றி, அவருக்குதான் நீ முதலிடம் கொடுக்கவேண்டும். முதலாவது தேவனுடைய இராஜ்ஜியமும், அவருடைய நீதியும் என்று வாழவேண்டும். இதுதான் வேதம் போதிக்கும் கிறிஸ்தவனின் அளவு.

ஆகவேதான் பவுல் சொன்னார், "என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா 2:20). முதலாவது தேவனுடைய ராஜ்ஜியம்தான். ஆனால் ஆண்டவர் தெளிவாக சொல்லுகிறார், நீ என்னை அப்படித் தேடினால் நான் உன்னைக் கைவிடமாட்டேன், உன்னோடு கூட இருப்பேன், மற்ற எல்லாவற்றையும் உனக்குக் கூட கூட்டிக் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார். மேலும் உன்னைப் பாதுகாக்கிறேன், பராமரிக்கிறேன், பெலப்படுத்துகிறேன் என்கிறார்.

அருமையானவர்களே! இயேசுவைப் பின்பற்றுவதினால் நாம் இழந்து போகமாட்டோம். அநேகர் இயேசுவின் வழி மிகவும் கடினமாக இருக்கிறதே என்று நினைக்கிறார்கள். ஆனால் இது கடினமல்ல, மிகவும் சுலபமான வழி இதுதான். சரி வேறுவழி ஏதாகிலும் எளிமையாக இருக்குமோவென்று சுயவழியில் நடந்தால் அங்கு பிரச்சனைகள் அதிகமாக இருக்கிறது. சரி பாவத்தினால் மகிழ்ச்சியாக வாழமுடியுமா என்று பார்த்தால் அங்கு இன்னும் நிர்ப்பந்தமான நிலைக்கு உள்ளாகிறோம். வேதத்தை நம்புகிறோம், அதில் நரகம் மோட்சம் என்று இயேசு சொல்லியிருப்பதால் அது உண்மையானது. ஒருவேளை நான் விரும்புகிறபடி இங்கு

வாழ்ந்துவிட்டால், நியாயத்தீர்ப்பு நாளில் நான் என்ன பதில் சொல்லுவேன்? அங்கு ஆண்டவர் உனக்கு இவ்வளவு தருணங்களைக் கொடுத்தேனே, ஆனால் நீ தானே எல்லாவற்றையும் புறக்கணித்தாய் என்று சொல்லுவாரே. நீ ஆண்டவரிடத்தில் நான் உமக்காக இதெல்லாம் செய்தேனே, உம்முடைய நாமத்தில் இதெல்லாம் செய்தேனே என்று சொன்னாலும், அவர் "என்னைவிட்டு அகன்று போ அக்கிரம செய்கைக்காரனே" என்று சொல்லுவாரே. மேலும் என்னுடைய சித்தப்படி செய்தவர்களுக்கு மாத்திரமே இங்கு இடமுண்டு, உனக்கு இடமில்லை என்று தள்ளிவிடுவாரே.

ஆனால் ஒரு உண்மையை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். கிறிஸ்துவின் வழி மாத்திரமே சிறந்த வழி. நம்முடைய நினைவுகள், எண்ணங்கள் எல்லாம் வீண். தேவனுடைய வழியே சிறந்தவழி. அவர் நம்மைப் பார்த்து, இதுவே வழி இதில் நடவுங்கள் என்று மிக அழகாக நம்மை வழிநடத்துகிறார். நான் உன்னைத் தாங்குவேன், சுமப்பேன், தப்புவிப்பேன் என்று சொல்லுகிறார். உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உன்னோடு கூட இருப்பேன் என்று சொல்லுகிறார். இவ்வளவு வாக்குறுதிகளை தேவன் நமக்கு கொடுத்திருந்தும், நாம் அதில் நடக்கவில்லை என்றால் நம் நிலை என்னவாகும் என்று சிந்தித்துப்பாருங்கள். சபையை உனக்கு ஏற்படுத்திக் கொடுத்து சபையின் மூலமாக நீ வளரும்படியான ஆவிக்குரிய போஷாக்கை உனக்குக் கொடுக்கிறார். ஆவிக்குரிய காரியங்களில் நீங்கள் வளர்க்கப்படுகிறீர்கள். சபையில் ஞாயிற்றுக் கிழமை காலை, மாலை ஆராதனை, வேத ஆராய்ச்சிக் கூட்டம், ஜெபக் கூட்டம் என்று பல காரியங்களை உங்களுக்கென்று ஏற்படுத்திக் கொடுத்து, உன்னுடைய ஆத்துமாவை போஷிக்கிறார். ஏனென்று கேட்டால், இந்த உலகத்தின் காரியங்களில் நீ சிக்குண்டு அலைகிறாய். மேலும் சிற்றின்பத்தின் மயக்கம், பெருமை, கண்களின் இச்சைகள், கவர்ச்சிகள், மாயைகளின் மூலம் நீ தள்ளாடுகிறாய். இன்னும் பிறருக்குரிய பொருட்களைப் பார்த்து அது எனக்கு இல்லையே, அவர்களைப் போல நான் இல்லையே என்று அங்கலாய்க்கிறாய். இவ்விதமான காரியங்களில் நீ கறைபட்டு போய்விடக்கூடாது என்பதினால் தான் சபையின் மூலம் இவ்வளவு சிலாக்கியத்தை உனக்குக் கொடுக்கிறார். ஆனால் நீ என்ன சொல்லுகிறாய்? அதெல்லாம் எனக்கு வேண்டாம். அது இல்லாமலே நான் ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழமுடியும் என்று அல்லத்தட்டுகிறாய்.

## சீஷன் என்பவன் அனுதினமும் தன் சிலுவையை சுமப்பவன்:

*அன்பானவர்களே! வேதம் சொல்லுகிற வாழ்க்கைமுறை வேறு. "பின்பு அநேக ஜனங்கள் அவரோடேகூடப் பிரயாணமாய்ப் போகையில், அவர்களிடமாய் அவர் திரும்பிப்பார்த்து: யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:25-26). இதுதான் வேதம் போதிக்கும் கிறிஸ்தவ வாழ்க்கை. இதுதான் சீஷத்துவம். இதற்குக் குறைவான அளவுகளை இயேசுகிறிஸ்து போதிக்கவுமில்லை, அங்கீகரிக்கவுமில்லை. யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் என்று சொல்லுவது கடினமாக தோன்றுகிறதா? இதில் என்ன சொல்லுகிறார்? நீ முதலாவது தேவனை வைக்கவேண்டும் என்கிறார். மற்றவர்களுக்கு பிரியமாக நடக்கவேண்டும் என்பதல்ல, முதலாவது நீ தேவனை வைத்து அவரைப் பின்பற்று என்று போதிக்கிறார்.*

*நான் ஒரு வாலிபனாக இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பொழுது, அநேக பிரச்சனைகள், பாடுகளின் ஊடாக கடந்து சென்றேன். என் தந்தை மிகவும் என்னை அதைரியப்படுத்தினார். என் வாழ்க்கையில் எல்லாவற்றிலும் தோல்விகள். இவ்விதமான சூழ்நிலையிலும் தேவனைவிட்டு நான் பின்வாங்கவில்லை. பாடுகள், நிந்தைகள், போராட்டங்கள் எல்லாவற்றையும் கடந்து சென்றேன். அன்பானவர்களே! கலப்பையின் மேல் கையை வைத்துவிட்டு பின்னிட்டு பார்க்க முடியாது. அவர் என்ன சொல்லுகிறாரோ அதுதான் ஜீவ வழி. இந்த உலகத்தில் நீ அவரைத் தவிர வேறெதையுமே அவருக்கு மேலாக நேசிக்க முடியாது. அவர் அந்த நேசத்திற்கு பாத்திரமானவர். உன் பாவங்களுக்காக சிலுவையில் பலியாக தன்னையே ஒப்புக்கொடுத்தவர். "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:27) என்று சொல்லுகிறார்.*

*இந்த உலகத்தின் எல்லா பாடுகளும் சிலுவையல்ல. இயேசுவுக்காக வாழுகிறதில் நீ படுகிற பாடுகள், குறைவுகள்,*

மற்றவர்களால் புறகணிக்கப்படுதல் போன்றவையே சிலுவை. ஆகவே இந்த சிலுவையை சுமந்துகொண்டு நீ கிறிஸ்துவை பின்பற்றவில்லை என்றால், நீ அவருக்கு பாத்திரவான் அல்ல. இன்றைக்கு தேவன் உன்னையும் என்னையும் பார்த்து என்ன சொல்லக்கூடும்? உன் ஆத்துமா விலையேறப்பெற்றது. இன்றைக்கு நான் மரித்தாலும் பரலோகத்திற்கு செல்வேனா? உங்களையே ஆராய்ந்து பாருங்கள். அன்பானவர்களே! உன்னுடைய வாழ்க்கையில் முதலாவது தேவன் இல்லையென்றால் நீ சீஷனல்ல, கிறிஸ்தவனுமல்ல. ஒருவேளை உங்கள் மனதில் என்ன இருக்கிறதோ எனக்கு தெரியாது. இதை வாசிக்கும்பொழுது பிசாசு என்ன உங்கள் மனதில் விதைக்கிறானோ எனக்கு தெரியாது நண்பர்களே! ஆனால் வேதம் சொல்லுகிறது, சிலுவையை எடுத்து என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரனல்ல. உன்னுடைய வாழ்க்கையில் இந்த வேதத்திற்கு முழுமையாக அர்ப்பணித்து வாழுகிற வாழ்க்கை உண்டா? உன் வாழ்க்கை மற்றவர்களுக்கு சாட்சியாக இருக்கிறதா? அல்லது மற்றவர்கள் உன்னைப் பார்த்து ஒரு நல்ல சாட்சியிடக் கூடுமா? இந்த உலகம் ஒரு அநித்தியமானது. கண்ணை மூடி கண்ணைத் திறப்பதற்குள் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லுபவர்கள் அநேகர். ஒருவேளை அவர்கள் எல்லோரும், நான் அதிக நாள் இந்த உலகத்தில் வாழுவேன் என்று எண்ணி வாழ்ந்திருப்பார்கள். ஆனால் அவர்களின் பயணம் முடிந்து போனது. அவர்களின் நிலை என்னவாக இருக்கும் என்பது நமக்குத் தெரியாது. வாழ்க்கை என்பது அவ்வளவு தான், ஒருநாள் எதிர்பாராத வேளையிலே நீயும் நானும் இந்த உலகத்தைவிட்டு கடக்கப் போகிறோம். ஆனால் எங்கே போகப்போகிறோம்? இது கிருபையின் காலம், இரக்கத்தின் காலம். தேவன் உன்னோடு கூட தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கிறார். ஆண்டவருடைய வார்த்தை அநேகருடைய வாழ்க்கையில் கிடைக்கவில்லை. அநேக சபைகளில் சத்தியம் சத்தியமாக போதிக்கப்படுவதில்லை. சத்தியத்தைப் போதிக்கிற சபைக்கு போகிற மக்கள், என்ன இது எப்பொழுது பார்த்தாலும் சிலுவை, பாடுகள் என்று இதையேதான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனக்கேற்ற சபை எங்காகிலும் இருக்கிறதா என்று தேடிப் போகிறார்கள். ஒருவேளை நீ இவ்வாறு எண்ணுவாயானால் சத்தியம் இதுதானே. இதை ஒருவராலும் மாற்ற முடியாது.

## விலைக்கிரயத்தை கணக்கிட்டு இயேசுவை பின்பற்று:

*ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மேலும் சொல்லுகிறார், நீ முன்னதாகவே கணக்குப் போட்டு என்னைப் பின்பற்று என்கிறார். உன்னால் இது முடியுமா இல்லையா என்று கணக்குப் போட்டே என்னைப் பின்பற்று என்று சொல்லுகிறார். "உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால், பார்க்கிறவர்களெல்லாரும்: இந்த மனுஷன் கட்டத்தொடங்கி, முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம்பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ? அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக்கொண்டு எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனைபண்ணாமலிருப்பானோ? கூடாதென்று கண்டால், மற்றவன் இன்னும் தூரத்திலிருக்கும்போதே, ஸ்தானாபதிகளை அனுப்பி, சமாதானத்துக்கானவைகளைக் கேட்டுக்கொள்வானே. அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:28-33). நீ எல்லாவற்றையும் வெறுத்து விட்டுவிட்டு என்னைப் பின்பற்ற முடியுமா முடியாதா என்று கணக்கு போட்டு என்னைப் பின்பற்று என்று தேவன் சொல்லுகிறார்.*

*அருமையான சகோதரனே! சகோதரியே! ஒருவேளை தேவனுக்கு புறம்பான காரியங்கள் உன்னிடத்தில் இருக்கின்றன என்று நீ உணர்வாயானால், அதை நீ சரிபடுத்தாமல் விடுவாயானால் உனக்கு ஆபத்து. நம் வாழ்க்கையில் தேவன் தொடர்ந்து நம்மோடு பேசிக்கொண்டே இருக்கிறார். நம்முடைய ஆத்துமாவின் நிலையைக் குறித்து தெளிவாக எடுத்துரைக்கிறார். இல்லை, அதெல்லாம் என்னால் சரி செய்ய முடியாது அப்படித்தான் வாழுவேன் என்று நீ சொல்லுவாயானால் இனி உனக்கு என்ன நம்பிக்கையுண்டு? வேதம் உன் இஷ்டப்படி வாழ*

போதிக்கவில்லையே. நீ உன் காரியத்தை நிதானிக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே தேவன், நீ செல்லும் செலவை கணக்குப் போட்டே என்னைப் பின்பற்று என்கிறார். அன்பானவர்களே! சீஷத்துவம் என்பது வெறும் போதனையல்ல, அது பின்பற்ற வேண்டிய ஒன்று. மேலும், "உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்று சொல்லுகிறார். சுயத்தை ஒருவன் வெறுக்காவிட்டால் அவன் கிறிஸ்தவனுமல்ல, சீஷனுமல்ல. இயேசுகிறிஸ்து இப்படி போதிக்கிறார், நாம் அந்த அளவுக்கு வாழவேண்டும் என்ற அவசியமில்லை, நம்மால் முடிந்த அளவுக்கு வாழ்ந்தால் போதும் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் அது வேதத்தின் வரைமுறை இல்லை.

## ஆதாயத்திற்காக இயேசுகிறிஸ்துவை தேடினவர்கள்:

யோவான் எழுதின சுவிசேஷம் ஆறாம் அதிகாரத்தில் (யோவான் ***6:22-67***) பார்த்தோமேயானால், இந்த அதிகாரத்தில் இருக்கிற மக்கள் யாரென்று சொன்னால், இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு அதற்காக அவரைப் பின்பற்றினவர்கள். இயேசுவானவர் ஆகாரத்தின் மூலமாகவும், அற்புதத்தின் மூலமாகவும் தங்களை வழிநடத்துவார் என்றெண்ணி ஒரு திரள் கூட்ட மக்கள் வருகிறார்கள். "மறுநாளில் கடலின் அக்கரையிலே நின்ற ஜனங்கள் அவருடைய சீஷர் ஏறின அந்த ஒரே படவுதவிர அங்கே வேறொரு படவும் இருந்ததில்லையென்றும், இயேசு தம்முடைய சீஷருடனேகூடப் படவில் ஏறாமல் அவருடைய சீஷர்மாத்திரம் போனார்களென்றும் அறிந்தார்கள். கர்த்தர் ஸ்தோத்திரஞ் செய்தபின்பு அவர்கள் அப்பம் சாப்பிட்ட இடத்துக்குச் சமீபமாய்த் திபேரியாவிலிருந்து வேறே படவுகள் வந்தது. அப்பொழுது இயேசுவும் அவருடைய சீஷரும் அங்கே இல்லாததை ஜனங்கள் கண்டு, உடனே அந்தப் படவுகளில் ஏறி, இயேசுவைத் தேடிக்கொண்டு, கப்பர்நகூமுக்கு வந்தார்கள். கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்டபோது: ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர் என்று கேட்டார்கள்"(யோவான் ***6:22-25).***

*இந்த மக்கள் மெய்யாலும் அதிக தூரம் பிரயாணப்பட்டு இயேசுவைத் தேடி வந்தார்கள். இவர்களின் பிரயாசத்தை நாம் பாராட்டத்தான் வேண்டும். அதிக ஆவலுடன் இயேசுகிறிஸ்துவினிடத்தில் "ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர்" என்று கேட்டார்கள். அதாவது போதகரே எப்பொழுது இங்கு வந்தீர்கள், நாங்கள் உம்மை அங்கே தேடி அலைந்தோமே என்று கேட்டார்கள். இப்படி தேடி அலைந்து வந்த மக்களைப் பார்த்து இயேசு: "நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் **6:26**) என்று சொன்னார். இந்த ஜனங்கள், இயேசுகிறிஸ்து இவ்வளவு பெரிய அற்புதத்தை செய்திருக்கிறாரே, இவர்தான் தேவன் என்று விசுவாசித்து வராமல், இனிமேல் நாம் எந்த வேலையும் செய்யத் தேவையில்லை, இங்கு அருமையான உணவை வருவிக்கக் கூடிய ஒரு நபர் இருக்கிறார், அவரோடே எப்பொழுதும் இருந்துவிட்டால் போதும் என்று ஆண்டவரிடத்தில் வந்தார்கள். அவர்களைப் பார்த்து நேரடியாக தேவன் கடிந்து கொண்டார்.*

*அன்பானவர்களே! இயேசுகிறிஸ்துவை ஆதாயத்திற்காக பின்பற்றுகிற மனநிலையோடு கூட நாம் வருவோமானால் தேவன் சொல்லுகிறார், "அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்" (யோவான் **6:27**). அன்பானவர்களே! அழிந்து போகிற ஆதாயத்திற்காக இயேசுகிறிஸ்துவை தேடாதீர்கள். நித்திய ராஜ்ஜியத்திற்காக அவரைத் தேடுங்கள். இந்த ஜனங்கள் தங்களின் பிரயாசம் வீணாகிவிட்டது என்று அறிந்தபடியால், இயேசுவை விட்டு பின்வாங்குவதை நாம் பார்க்கிறோம். இவர்கள் வேதத்தைக் கூட நன்றாக தெரிந்து வைத்திருந்த ஜனங்கள்தான். "அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்" (யோவான் **6:27-29**). முதலாவது*

நீங்கள் தேவனை தேடவேண்டும் என்று அவர் சொன்னபொழுது அந்த ஜனங்கள், “அதற்கு அவர்கள்: அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்? வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக்கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடி, நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே என்றார்கள்” (யோவான் 6:30-31) என்று இயேசுகிறிஸ்துவினிடத்தில் கேட்டார்கள்.

வேதத்தை அறிந்திருப்பது சீஷத்துவம் அல்ல, வேதத்தைக் கடைப்பிடிப்பதே சீஷத்துவம். ஆகவேதான் யோசுவாவிடம் தேவன், என் வார்த்தைகளின்படி செய்ய கவனமாயிரு என்று சொன்னார். “இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்” (யோசுவா 1:8). வெறும் வேத அறிவு போதாது. அதன்படி நடக்கின்றாயா? என்பது தான் கேள்வி. அதன்படி நீ நடக்கவில்லை என்றால் நீ இரட்சிக்கப்படவே இல்லை. இதை வாசிக்கும் பொழுது ஒருவேளை உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்காலம், ஆனால் நான் வேதம் போதிக்கிற சத்தியத்தை தான் உங்களுக்கு எழுதுகிறேன். இது என்னுடைய சுய ஞானத்தினால் உண்டான போதனையல்ல. உன்னுடைய ஆத்துமாவின் விலைமதிப்பை உணர்ந்துதான் இதை உங்களுக்கு எழுகிறேன். வேதம் போதிக்கிற தெளிவான சத்தியத்தை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா என்று எனக்கு தெரியாது, ஆனால் இதுதான் சத்தியம். நீங்கள் தலைமுறை தலைமுறையாக கிறிஸ்தவ குடும்பம் என்று இருக்கலாம். நீ இரட்சிக்கப்படவில்லை என்றால் எல்லாமே வீணாயிற்றே. இது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது, இந்த வார்த்தைக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டுமே. இதை வாசித்தும் நீ, உன் சுயவழியில் வாழுவாயானால் உன் நிலை என்னவாக இருக்கும்? போலியான போதனைகளை நம்பி ஏமாந்து போகாதே, தேவனிடத்தில் நீ தான் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்.

## பின்வாங்கிய சீஷர்கள்:

மேலும் தேவன், “நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது”(யோவான் 6:53-55). இயேசுகிறிஸ்துவினுடைய இந்த உபதேசம் சீஷர்களுக்கு இடறலாயிருக்கிறதை நாம் பார்க்கிறோம். “கப்பர்நகூமிலுள்ள ஜெப ஆலயத்திலே அவர் உபதேசிக்கையில் இவைகளைச் சொன்னார். அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்” (யோவான் 6:59-60). இதைக்கேட்ட சீஷர்கள் முறுமுறுக்கிறார்கள். அன்பானவர்களே! சத்தியம் உனக்கு மிகக்கடினமாக தோன்றலாம். ஆனால் இதுதான் இயேசுகிறிஸ்துவின் உபதேசம். இந்த சத்தியத்தை நீ விளங்கிக் கொள்ள தேவனிடத்தில் மன்றாடு, இந்த சத்தியம்தான் உன்னை விடுதலையாக்க முடியும். நீ இவ்வளவு நாட்களாக எண்ணி வாழ்ந்து கொண்டிருந்த முறை, வேதம் போதிக்கும் சத்தியத்திற்கு சரியாய் இல்லையென்றால், தேவ சமுகத்தில் உன்னைத் தாழ்த்து. திரள்கூட்ட மக்கள் ஆண்டவரைத் தேடிவந்தார்கள், இந்த உபதேசத்தைக் கேட்டு, இது கடினமான உபதேசம் யார் இதை பின்பற்றுவார்கள்? என்று கேட்டார்கள்.

ஒருவேளை நீயும் அவ்விதம் கேட்பாயானால், ஒன்றை மட்டும் தெரிந்து கொள், நீ தேவ கோபாக்கினையை உன்பேரில் குவித்துக் கொள்ளுகிறாய். இன்றைக்கு போலி ஊழியர்கள் இலகுவான சத்தியத்தை சபைகளில் போதித்து, அதிக கூட்டத்தை சேர்க்கின்றார்கள். அவர்களின் ஒவ்வொரு ஆத்துமாவும் இருளில் மூழ்கி போய்விட்டது. ஒருவேளை நீயும் அவ்விதமான இருளில் மூழ்கி இருப்பாயானால், இதுவே சத்தியம், இதை உணர்ந்து இதில் நடவுங்கள். இயேசுகிறிஸ்து இவ்விதமாய் அந்த மக்களிடம் போதித்தவுடன் அவர்கள் போகிறார்களே என்று கவலையா அடைந்தார்? இல்லையே, “சீஷர்கள் அதைக்குறித்து

*முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி: இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்? ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு என்றார்; விசுவாசியாதவர்கள் இன்னாரென்றும், தம்மைக் காட்டிக்கொடுப்பவன் இன்னானென்றும் ஆதிமுதலாக இயேசு அறிந்திருந்தபடியால், அவர் பின்னும்: ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 6:61-65)* என்று சொன்னார். அன்பானவர்களே! இது உண்மைதான், ஒரு மனிதனை ஆண்டவர் தெரிந்துகொள்ளவில்லை என்றால் அந்த மனிதன் தேவனிடத்தில் வரமுடியாது. இயேசுகிறிஸ்து இந்த சத்தியத்தை தெளிவாக அறிந்திருந்தார், தெளிவாகப் போதித்தார். இந்த சத்தியத்திற்கு நீங்கள் உத்திரவாதி. ஒருவேளை நீங்கள், இயேசுகிறிஸ்து என்னைத் தெரிந்துகொள்ளவில்லை ஆகவே நான் இரட்சிக்கப்படவில்லை என்று சொல்லமுடியாது.

## பெருமையை உடையுங்கள்:

இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசிப்பது உன்னுடைய கடமை. உன்னுடைய பெருமையையெல்லாம் விட்டுவிட்டு உன்னைத் தாழ்த்தி, "ஆண்டவரே! நான் ஒரு இரட்சிக்கப்படாத மனிதன், நான் ஒரு பாவியாக இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன், நான் சபைக்கு ஒரு தடைக்கல்லாக இருக்கிறேன், என்னை மன்னியும்" என்று உன்னை ஒப்புக்கொடு. அன்பானவர்களே! உன் பெருமையெல்லாம் உடைப்பதுதான் தாழ்மை. உன் பெருமையெல்லாம் சிலுவையில் அறைந்துவிடு. அதைதான் "தன்னைத்தான் வெறுத்து" என்று வேதம் சொல்லுகிறது. அருமையானவர்களே! நீங்கள் உலகத்தோடு பல மணி நேரங்கள் செலவு செய்கிறீர்கள், ஆனால் உன் ஆத்துமாவிற்காக தேவ சமுகத்தில் உன்னை எந்த அளவிற்கு தாழ்த்தி வாழுகிறாய். சிந்தித்துப்பாருங்கள், ஒருவேளை நீ நரகத்திற்கு போவாயானால் உன்னை நீயே அங்கு மன்னித்துக் கொள்ள முடியாது. ஏனென்றால்,

*வேதம் போதிக்கும் இந்த சத்தியத்திற்கு கீழ்ப்படியவில்லை. அங்கு நீ என்னதான் கதறினாலும் உன் சொல்லைக் கேட்போர் ஒருவரும் இருக்கமாட்டார்கள். தனிமையில் உன் வேதனை பெருகும். அங்கு தேவன் உன் ஜெபத்தைக் கேட்டு பதிலளிக்கமாட்டார். நித்திய நித்தியமாய் ஒரு ஆத்துமா இதே நிலையில் காணப்படும் என்று நான் சிந்திக்கும் பொழுது என்னால் இதை புரிந்துகொள்ளவே முடியவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்து பொய் சொல்லுகிறவர் அல்ல, வேதம் ஒருக்காலும் தவறிழைக்காதது. ஆகவே இந்த வேதத்தைத்தான் நான் நம்புகிறேன், வேறொரு நம்பிக்கை எனக்கு இல்லை. அன்பான சகோதரனே! சகோதரியே! நீ மெய்யான சீஷனா? கிறிஸ்தவனா? தேவன் இன்றைக்கு தெளிவாக உன்னோடு இதன் மூலம் பேசி இருக்கிறார் என்று நான் நம்புகிறேன். இடுக்கமான வாசலில் உட்பிரவேசி (உன் பெருமையை எல்லாம் உடை). தேவனுடைய சமுகத்திற்கு சென்று, "கர்த்தாவே! நான் இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசிக்கிறேன். என்னுடைய பெருமை எவ்வளவாக இருக்கிறது? உமக்கு பிரியமில்லாத காரியங்கள் எவை? எனக்கு வெளிப்படுத்தும் ஆண்டவரே!" என்று உன்னை ஒப்புக்கொடு. ஒரு சீஷன் (கிறிஸ்தவன்) என்பவன் தன் பெருமையை உடைத்தவன்.*

**கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!**

## குறிப்புகள்

# Tamil Daily Devotion

# தின தியானம் 2018

- தின தியானம்
- நூற்றுக்கணக்கான பிரசங்கங்கள்
- இலவச புத்தகங்கள்
- நினைப்பூட்டி
- நேரடி ஒளிபரப்பு
- ரேடியோ 24x7




Available on the App Store

Get it on Google play

## ANDROID

SCAN THE CODE WITH YOUR MOBILE DEVICE TO DOWNLOAD OR USE THE LINK BELOW IN THE BROWSER

**http://bit.do/dailydev**

## iPHONE & iPAD

SCAN THE CODE WITH YOUR IPAD OR IPHONE TO DOWNLOAD OR TYPE THE LINK BELOW IN YOUR BROWSER

**http://bit.do/itunesdailydev**

Visit our Website

**www.tamilchristianmessages.com**